இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 05 - 2008/2009
LWU 3312 – காணிச் சட்டம்
மதிப்பட்டுப் பரீட்சை - 1
40 நிமிடங்கள்

13.10.2008 நேரம்: மு.ப 11.30 – மு.ப 12.10

வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

"அரசு வழக்கமாக நியமிக்கப்பட்ட அதன் முகவர்களினால், மீன்பிடியாளர்கள் கடற்கரைகளில் தமது வலைகளை விரிப்பதற்கு, அல்லது கடற்கரைக்கு அடுத்துள்ள அரசிற்கு சொந்தமான காணிகளின் மீது வலைகளை விரிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு அரசு தகுதியுள்ளது என்பதில் எனக்கு ஐயமில்லை. வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ கடலை அடுத்திருக்கும் நிலத்தினை பயன்படுத்துவதற்கான அனுமதி பத்திரமின்றி, அத்தகைய நிலத்தின் பயன்பாட்டினை பெறல் நியாயமானதென எனக்குத் தோன்றுகிறது, அன்றேல் மீன்பிடித் தொழிலானது சாத்தியமற்றதாகிவிடும்."

Lawrie ACJ in *Rowel Mudaliyar* V. *Peris(*1895) 1 NLR 81.

ஆதனம் தொடர்பான பல்வேறு வகுப்பாக்கங்கள் மற்றும் பொது பயன்பாட்டிற்காக அத்தகைய ஆதனங்களை பெறக்கூடிய தன்மை(avalaibility) என்பவற்றிற்கு விசேட முக்கியத்துவம் கொடுத்து இக் கூற்றினை நுணுக்கமாக மதிப்பிடுக.

ஏழு அறைகளைக் கொண்ட பிரமாண்டமான வீட்டிற்கும் மற்றும் பலன் தருகின்ற தென்னை மரங்களுடைய 5 ஏக்கர் நிலத்திற்கும் சொந்தக்காரரான பெரேரா தனது வீட்டினையும் ஆதனத்தினையும் விற்பனை செய்ய விரும்புகின்றார். ஓர் வார இறுதி செய்தித்தாளில் அவ் விற்பனையை விளம்பரம் செய்ததுடன் எதிர் கால கொள்வனவாளர்களிடம் இருந்து கொடைமுனைவுகளை வேண்டியிருந்தார். குறித்த விளம்பரத்தினை கண்ணுற்ற சில்வா பெரேராவினை தொடர்பு கொண்டதுடன் குறித்த ஆதனத்தினை கொள்வனவு செய்யும் தனது எண்ணத்தினை அவருக்கு கூறினார். பின்னர் குறித்த வீட்டினையும் ஆதனத்தினையும் பரிசீலித்த பிறகு பரிமாற்றல் தொடர்பான இயைபுடைய ஆவணங்களை சில்வா கையொப்பமிட்டார். இயைபுடைய அவ் ஆவணங்களை கையொப்பமிடும்போது வீட்டிலுள்ள "தற்காலிக பொருத்துகைகளை"(temporary fittings) தாம் அகற்றுவதாக பெரோ சில்வாவிடம் கூறினார். இவரின் இக்குறிப்பிடுகை தொடர்பில் சில்வா அவ்வளவாக தமது கவனத்தினை செலுத்தவில்லை.

இரண்டு வாரங்களின் பின்னர் சில்வா அவ்வீட்டிற்கு குடிபெயர்ந்த பொழுது எல்லா குளியலறை இணைப்புக்கள், அடிக்கூரை மின் விசிறிகள்(ceiling fans) பாத்திர அலுமாரிகள்(pantry copboards), எடுத்துச்செல்லத்தக்க வகையில் அமைந்த மின் சூட்டடுப்பு(electric stoves) , கதவு, யன்னல்களில் இருந்த திரைச்சீலைகள் மற்றும் விலை கூடிய தொங்கு சீலைகள்(expensive tapestries) ஆகியவற்றை பெரேரா அகற்றியுள்ளமையை காண்கின்றார்.

இலங்கையின் ஆதனச்சட்டத்தின் கீழ் மேற்கண்ட பொருட்களை வீட்டில் இருந்து அகற்றிச் செல்வதற்கு பெரேராவிற்கு ஏதேனும் சட்ட உரிமை இருக்கின்றதா என அறிய சில்வா விரும்புகின்றார்.

சில்வாவிற்கு ஆலோசனை வழங்குக. தீர்க்கப்பட்ட வழக்குகளை தொடர்புறுத்தி உமது விடையினை ஆதாரப்படுத்துக.

குறிப்பு: உறுதிகளை நிறைவேற்ற **(execution of deeds)**, காணி பரிமாற்றல்கள் அல்லது ஏனைய உரித்து மாற்றல் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான சட்டங்களை நீர் ஆராய த்தேவைப்படுத்தப்படவில்லை.

(பதிப்புரிமையுடையது)